# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.6

**Deposition of witness for }**

**Defence: -**

**Case No.** Sessions Case No.78/2015

| | | | |
|---|---|---|---|
| **Name** | முத்துராக்கு | **W/o.** | உடையனசாமி |
| **Village** | வேலூர் ஒத்தவீடு | **Taluk** | மானாமதுரை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.6 |
| **Date** | 20.12.2021 | **Age** | 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 20.12.2021.**

**முதல் விசாரணை:**

நான் வேலூர் ஒத்தவீட்டில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் எந்த வேலையும் செய்து வரவில்லை. ஆஜர் எதிரி பாண்டித்துரையை எனக்கு தெரியும். சம்பவத்தில் இறந்துபோன ராஜேஸ்வரி, தனபாக்கியம், ஆறுமுகம் ஆகிய மூவரையும் எனக்கு தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் இறந்துபோன ராஜேஸ்வரியின் தகப்பனார் இருளப்பன் வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறேன். ராஜேஸ்வரியை எதிரி பாண்டித்துரைக்கு

இரண்டாவது தாரமாக திருமணம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியம். சம்பவ சமயத்தில் ராஜேஸ்வரிக்கு தென்பாண்டி என்ற 4 மாத ஆண்குழந்தை இருந்த விவரம் எனக்கு தெரியும். எதிரி பாண்டித்துரை குடித்துவிட்டு வந்து அடிக்கடி தகராறு செய்வதால் பிரச்சனை ஏற்பட்டு அடிக்கடி ராஜேஸ்வரி தனது தாயார் தனபாக்கியம் வீட்டிற்கு வந்து விடும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி பாண்டித்துரை, அவரது தாயார், அவரது சகோதரி ஆகியோர் மீது ராஜேஸ்வரி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வரதட்சணை கொடுமை சம்மந்தமாக புகார் மனு கொடுத்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 06.01.2015-ம் தேதி இரவு 8.00 மணிக்கு இருளப்பன் உறவினர்கள் முனியாண்டி மகன் வீராச்சாமி, கோவிந்தன் மனைவி குஞ்சரம் ஆகியோர் ராஜேஸ்வரியின் குழந்தையை பார்ப்பதற்காக தனபாக்கியம் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதுபோல் காவல் ஆய்வாளர் விசாரிக்கும்பொழுது நான் சொன்னேன் என்றால் சரியல்ல. நானும், எனது மகன் மாயழகு ஆகியோரும் வீராச்சாமி, குஞ்சரத்துடன் சேர்ந்து ராஜேஸ்வரியின் குழந்தையை பாாக்க தனபாக்கியம் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரியல்ல. அப்போது ராஜேஸ்வரி தனது குழந்தையுடன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அப்பொழுது எதிரி பாண்டித்துரை டி என் 63 கே 9093 என்ற எண்ணுள்ள மோட்டார்

சைக்கிளில் வந்து ராஜேஸ்வரியை பார்த்து குழந்தையை கேட்டதாகவும், ராஜேஸ்வரி குழந்தையை தர மறுத்ததாகவும் சொன்னார் என்றால் சரியல்ல. எதிரி பாண்டித்துரை முதுகிற்கு பின்னால் உள்ள அருவாளை எடுத்து ஏண்டி தேவடியா முண்டை என் குழந்தையை தர மறுக்கிறாய் என்று கூறி பாண்டித்துரை ராஜேஸ்வரியை கையில் வைத்திருந்த அருவாளால் வெட்டியதாகவும், தடுக்க வந்த அவரது தாயார் தனபாக்கியத்தை வெட்டியதாகவும், அதை பார்த்து சத்தம் போட்டு வந்த இருளப்பன் தாயார் ஆறுமுகத்தை வெட்டியதாகவும், அந்த மூவரும் துடிதுடித்து இரத்த வெள்ளத்தில் செத்து போனதாகவும் நான் காவல் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், எனது மகன் மாயழகு, வீராச்சாமி குஞ்சரம் ஆகியோர் சத்தம் போட்டு பாண்டித்துரையை பிடிக்க முயற்சி செய்தபோது என்னை பிடிக்க வந்தால் உங்களுக்கும் இந்த கதி தான் ஏற்படும் என எதிரி பாண்டிதுரை எங்களை மிரட்டி விட்டு குழந்தையை தூக்கிகொண்டு கிழக்கு பக்கமாக ஓடிவிட்டார் என்று காவல் துறை விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எங்களுடன் வந்த வீராச்சாமி கோயம்புத்தூரில் இருந்த இருளப்பனுக்கு சம்பவம் பற்றி தகவல் சொல்லிவிட்டு மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரி பாண்டித்துரை எனக்கு உறவினர் ஆவார். எதிரி பாண்டித்துரை கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரி பாண்டித்துரையை

காப்பாற்றுவதற்காக ஏற்கனவே காவல் ஆய்வாளர் விசாரிக்கும்பொழுது சம்பவம் பற்றி நடந்த விவரங்களை கூறிவிட்டு தற்போது மாற்றி பொய்ச்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை:** இல்லை